இருக்கின்றது ஆக்டிலே. அதாவது 18 வயது ஆனதற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திலே மைனர் மேஜராக ஆகிறார். அப்போது மைனர் சொத்துக்கள் எப்படி, எப்படி பராதீனம் செய்யப்பட்டிருக்கின்றது, எப்படி தன்னுடைய நலனுக்கு விரோதமாக யார், யாருக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று அவர் சூட் போடலாம். அப்படி சூட் போடுவதற்கு டைம் லிமிட் இருக்கின்றது என்று ஆலய நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் சொல்கிறார்கள். ஆனால், ஆலயத்தினுடைய வாதம் எப்படி என்றால் மைனர் 18 வயதுக்குப் பிறகு மேஜர் ஆகிறார் ; ஆனால் ஆண்டவன் என்றைக்குமே மைனராகத்தான் இருக்கிறார் ; அவர் அறங்காவலரின் பாதுகாப்பிலேதான் இருக்கிறார் ; எனவே, அவர் என்றைக்குமே மேஜராக ஆவதில்லை ; ஆகவே, கால வரையறை, டைம் லிமிட் இதற்குச் செல்லாது என்று சொல்கிறோம். அதனால் என்றைக்குமே அது அந்த ஆலயத்தினுடைய நன்மைக்கு விரோதமாக குறைந்த குத்தகைக்கு குறைந்த வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலைமை சரியல்ல என்ற வகையில் அவ்வாறு குறைந்த குத்தகைக்கும், குறைந்த வாடகைக்கும் கொடுக்கப்பட்டிருப்பது செல்லாது என்று சொல்வதற்கு சட்டத்திலே இடம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டம் வந்தால் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ நூறு கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள சொத்துக்கள் இந்த ஆலயங்களுக்குக் கிடைக்கும். அல்லது அவர்கள் விலைக்கு எடுத்துக்கொண்டால் தொகையாவது கிடைக்கும். ஆகவே, அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதுபற்றி மிகுந்த தீவிரமான பரிசீலனையில் சட்டத்துறை ஈடுபட்டிருக்கிறது.

கீரிப்பாறை ரப்பர் பதனிடும் தொழிற்சாலைக்குப் பக்கத்திலுள்ள தென்னை மரங்கள்

473 —(*வினா எண் 18273) திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு ரப்பர் தோட்டத்தில் கீரிப்பாறை ரப்பர் பதனிடும் தொழிற்சாலை பக்கத்தில் உள்ள தென்னை மரங்களைக் குத்தகைக்கு விட்டதில் 1980, 1981, 1982 ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருமானம் என்ன ?

(ஆ) இதே தொழிற்சாலைக் காம்பவுண்டினுள் உள்ள நிலத்தில் வாழை பயிரிட குத்தகைக்கு விட்டதில் 1980, 1981, 1982 ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருமானம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தென்னை மரங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை.

(ஆ) வாழை பயிரிட நிலம் குத்தகைக்கு விடப்படவில்லை.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, இந்த கீரிப்பாறை பாக்டரி இருக்கிற இடத்திற்கு பக்கத்தில் பல தென்னைகள் இருக்கின்றன. அதை யார் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், அது குத்தகைக்கு விடப்படவில்லையென்றால் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே. கீரிப்பாறை ரப்பர் பதனிடும் தொழிற்சாலை பக்கத்தில் 1974-75ல் நடப்பட்ட 16 தென்னை மரங்கள் தொழிற்கூடத்தில் இருந்து அமிலம் கலந்த தண்ணீர் வரும் இடத்திற்கு அருகாமையில் உள்ளதால் மிகக் குறைந்த அளவு காய்களைத்தான் அது தருகிறது. இந்த 16 மரங்களில் ஒரு சில சிறிய அளவு காய்த்து வருகிறது. அப்படி காய்த்து வருகிற மரங்களிலிருந்து கிடைக்கக் கூடியவற்றை அங்கு வருகிற பார்வையாளர்கள் அல்லது நம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்ற வி.ஐ.பி. கள் விருந்தினர்களாக வந்தால் அந்த இளநீர் வெட்டப்பட்டு அவர்களுக்கு பரிமாறுகிறோம் என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். பெரிய அளவிற்கு காய்க்க இல்லை, இளநீர் கிடைக்காததால் குத்தகைக்கு விடவில்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 43 தென்னங் கன்றுகள் 1973-74ல் வைக்கப்பட்டிருப்பதால் அவை காய்ப்புக்கு வரவில்லை. வாழை இன்னும் போதுமான அளவிற்கு காய்ப்புக்கு வரவில்லை. அதை பொது ஏலத்தில் விடவில்லை. இனிமேல் இதையும் ஏலத்தில் விட்டு ஏதாவது வருமானம் வருகிற விதத்தில் செயல்பட அந்தத் துறைக்கு நாம் அறிவுறுத்தியிருக்கிறோம்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கீரிப்பாறை பாக்டரியில் உள்ள அந்தத் தோட்டங்களில் வேலை செய்கிற பணியாளர்கள் குடியிருப்புகள் பக்கத்தில் பலன் தரும் மரங்கள் பல இருக்கின்றன. கீரிப்பாறை பாக்டரி அருகாமையில் தொழிலாளர்கள் குடியிருப்புகள் அருகில் காலியாக இருந்த பத்து ஏக்கர் தொழிலாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா அல்லது வேறு யாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது ? வேறு யாருக்காவது அப்படி குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் அதை தொழிலாளர்களுக்கு குத்தகைக்கு விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்த விவரம் என்னிடமில்லை. அது பற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

TRUTH ALONE TRIUMPHS